DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

SINGAMPUNARI

C.C. No. 124 /2023 PW . 5

பெயர் : லாவண்யா **தந்தை/கணவர் பெயர்:**

ஊர் : **தாலுகா:**

வயது : **தொழில்: கிராமநிர்வாக அலுவலர்**

ஜாதி : **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.04.2025

(எதிரிகள் ஆஜர்).

23.04.2025 முதல் விசாரணை:

1. நான் தற்போது திருவள்ளுவர் மாவட்டம் திருத்தணி தாலுகா பழையனூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி வட்டம்,வலசைப்பட்டி கிராமத்தில் கிராமநிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது 01.12.2022ம் தேதி வனக்காப்பாளர் கண்ணபிரான் கொடுத்த ரகசிய தகவலின் அடிப்படையில் எதிரிகளின் பட்டா விவசாய இடங்களில் எலிமருந்து கலந்த நெல்மணிகளை சாப்பிட்டு 4 பெண் மயில்கள் இறந்ததாக வந்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்று களவிசாரணை செய்தேன். (சாட்சி தனது கையில் வைத்திருந்த கைப்பற்றுதல் மகசரை பார்த்து சாட்சியம்அளிக்கிறார்). அப்போது புதுக்கோட்டை கண்மாய் பகுதி புல எண். 66, 65, 63, 62 உள்ள பட்டா இடங்களை ஆய்வு செய்ததில் பெண் மயில்கள் இறந்துகிடந்தது கண்டறியப்பட்டது. அதை வனக்காப்பாளர் கைப்பற்றி தயார்செய்த மகசரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் நான் அப்போது செய்தது தான். **(கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் அ.த.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேலும் சம்பவம் இடம் தொடர்பான வனத்துறை கேட்டுக்கொண்டதற்கென புலப்பட வரைப்படங்கள் 5 எண்ணம் **அ.த.சா.ஆ.24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புலஎண்களுக்கான அடங்கல் கணக்கு ஆகியவற்றை கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் கையொப்பம் செய்து வழங்கிய உண்மை நகல்கள் 5 எண்ணம் **அ.த.சா.ஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

2. எதிரிகள் ஆஜர்.எதிரிகளின் வழக்கறிஞர்ஆஜர். குற்றச்சாட்டு வனையப்பட்ட பிறகு குறுக்கு விசாரணை மேற்கொள்வதாக எதிரிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.